மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.. (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் கலைஞர் அவர்கள் முதன்முதலாக இந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறபோதே, 2000–லேயே இந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறபோது, மதுரையிலே விவசாய நிலத்திலே, பாம்பு கடித்து இறந்துவிட்ட இரண்டு பேருடைய குடும்பங்களுக்கு உடனடியாக ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதனால், எந்த case-லும், accident case என்றால் உடனடியாக F.I.R. Report வேண்டும். அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொல்கிறார். விபத்து நடந்தது என்பது நிரூபிக்கப்பட்டால், அது வீட்டிற்குப் போய் இறந்தாலும் சரி, hospital–ல் இறந்தாலும் சரி, எந்த இடத்தில் இறந்தாலும் கொடுப்பார்கள். அது கண்டிப்பாக உண்டு.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து கிடையாது. விபத்து ஏற்பட்டவுடன் அவர்கள் கேட்டபடி F.I.R. copy-யும், அதற்குண்டான சான்றுகள் எல்லாம் வழங்கிய பிறகு கொடுத்தால் போதும் என்பதுதான் எங்களுடைய வாதம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மேலும்,. . .

7. அறிவிப்பு

முக்கியப் பிரமுகர்கள் இருக்கையிலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கண்ணுறும் ஜார்கண்ட் சட்டப் பேரவைத் தலைவருக்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஜார்கண்ட் சட்டப் பேரவைத் தலைவர் திரு. சந்திரேஸ்வர் பிரசாத் சிங் அவர்கள் முக்கியப் பிரமுகர்கள் இருக்கையில் அமர்ந்து பேரவை நடவடிக்கைகளைப் பார்வையிட வந்துள்ளார்கள். உறுப்பினர்கள் சார்பில் அவரை வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2010 ஏப்ரல் 30] *[பேரவைத் தலைவர்]*

On behalf of the Members of the Assembly, I welcome Mr.Chandreshwar Prasad Singh, Hon'ble Speaker of Jharkhand Legislative Assembly, who is now witnessing the proceedings of our House. *(மேசையைத் தட்டும் ஒலி)*

6. மானியக் கோரிக்கைகள் 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 32—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

(ஆ) கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை —*தொடர்ச்சி*

(இ) கோரிக்கை எண் 18—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன் துணி நூல் மற்றும் கதர்த் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, தொடர்ந்து பேசுங்கள்.*

திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமைப்பு சாரா கட்டுமானத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை, பதிவு செய்த பிறகு 5 ஆண்டுகளுக்கொரு முறை புதுப்பிக்க வேண்டும் என்கின்ற ஒரு விதிமுறை இருக்கிறது. இந்தத் தொழிலைச் செய்கின்ற அனைவருமே கல்வியறிவு இல்லாத, கிராமப்புறத்திலே வாழ்ந்து வரக்கூடியவர்கள். அவர்கள் இந்த 5 ஆண்டு காலத்திலே நாம் புதுப்பிக்க வேண்டும் என்கின்ற விவரம் தெரியாத காரணத்தினாலும், அறியாத காரணத்தினாலும். அவர்கள் அதை உரிய காலக்கட்டத்திலே பதிவு செய்யத் தவறிவிடுகிறார்கள். ஆகவே, இந்தக் காரணத்திற்காக அவர்களுக்குச் செல்ல வேண்டிய இழப்பீட்டுத் தொகை நின்றுவிடாமல், ஏதோவொரு வகையில்*